Srimate Ramanujaya Nama:

KINCHITKARAM DHARMA SAMSTHAPANAM

# ஸ்ரீ ராமர் போற்றிய ஹனுமான்!!







**வெளியிடுவோர்:**

**கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்**



**Phone : 7598417682, 9790531919**

**Email : kinchitdharmam@gmail.com**

## ராமர், அகஸ்திய முனிவரிடம் ஹனுமானின் வலிமை, வாலி-இராவணனின் வலிமையயை விட மிக மேம்பட்டது என்று போற்றுகிறார்!!

உத்ரகாண்டம்- 35 ஸ்லோகம்- 3

**சௌர்யம் தாஷ்ய பலம்**
கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்
**தைர்ய ப்ராஞுதா நயசாதனம்|**
**விக்ரமஷ ப்ரபாவஷ**
**ஹனுமதி க்ருதாலயா||**

அறிவுக்கூர்மை

சூரத்தன்மை

மனவுறுதி

நீதி

உடல்வலிமை

பராக்கிரமம்



செயல்திறன்

பெரியவர்களிடம் காட்டும் மரியாதை ,பணிவு

**இவை அனைத்தும் ஹனுமனிடத்தில் குடிகொண்டிருந்தன என்று ராமரே தன் திருவாய் மலர்ந்து கூறுகிறார் !**

மேலும், ராமர், கீழ்கூறிய பராக்கிரம காரியங்களை, ஹனுமானை தவிர யாரால் செய்யமுடியும் ?! என்று வியக்கிறார் !!



நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள பெருங்கடலை தாவிக் கடந்தவர் !

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

அசோகவனத்தில் சீதையை பார்த்து பேசவும் செய்து , ஆறுதல் கூறியவர் !!

படைத்தலைவர்கள் ,மந்திரி குமாரர்கள் , கிங்கரர்கள் , அட்சய குமாரன் முதலியோரை தான் ஒருவனாகவே போரிட்டு வீழ்த்தியவர் !

போர்க்களத்தில் இவர் ஆற்றிய வீர சாகசங்களை இந்திரனோ, காலதேவனோ செய்திருக்கவில்லை !

ஹனுமானின் தோள்வலிமையினாலேயே போரில் அனைவரையும் மீட்க முடிந்தது !

இத்தகைய வீரம் பொருந்திய ஹனுமானின் சிறப்புமிக்க கோயில்களை காண்போம் !

# பால ஹனுமான்


## அஞ்சனாத்ரி: திருமலை

காண்டம் : உத்தர காண்டம்
சர்கம் : 35
ஸ்லோகம் : 23,24



இத்தலத்தில், ஹனுமான் குழந்தை வடிவில் தன் அன்னை அஞ்சனையின் மைந்தனாக, பால ஹனுமானாக காட்சியளிக்கிறார்!

கிஞ்சித்காரம் தர்ம ஸ்தாபநம்



# பால ஆஞ்சநேயர்
# குஜராத், இராமநாதபுரம்



காண்டம் : உத்தர காண்டம்
சர்கம் : 35
ஸ்லோகம் : 23,24



இத்தலங்களில், ஆஞ்சநேயர் சன்னதிக்கு மேல், விமானத்திற்கு பதில் ஆஞ்சநேயர் வால் சுருட்டி அதன் மேல், சுதை வடிவில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பு. வால் கோட்டை கோபுரத்தினுள் ராமர் , லட்சுமணர் மற்றும் சீதையுடன் அவரை, சேவிக்கும் வடிவில், பால ஹனுமானாக சேவை சாதிப்பார்!!

# விஷ்வருப ஆஞ்சநேயர்

## நங்கநல்லூர்

காண்டம் : சுந்தர காண்டம்
சர்கம் : 37
ஸ்லோகம் : 35,37



மலை போன்ற உடலையும், சிவந்த முகத்தினையும் , வஜ்ராயுதம் போன்ற கடை வாய்ப்பற்களையும், உடைய வாணராதிபதி மலை காடுகள் அனைத்தும் பிளந்து, எடுத்து செல்லும் சக்தியுடையவராய் விஷ்வரூபத்துடன் காட்சியளிக்கிறார்!

# சஞ்சீவி ஆஞ்சநேயர்

## காஞ்சிபுரம்

காண்டம் : யுத்த காண்டம்

சர்கம் : 74

ஸ்லோகம் : 69



**இராமாயணத்தில் லட்சுமணரை காப்பாற்றுவதற்காக சஞ்சீவி மலையை எடுத்து வந்தார்!**

**இத்தலத்தில் ஹநுமான் தன் கரங்களில் மலையை ஏந்தியபடி வடதிசையை நோக்கி அயோத்தியை பார்த்தவாரே காட்சியளிக்கிறார்!**

# விஜய ஆஞ்சநேயர்
## வேலூர்

காண்டம் : யுத்த காண்டம்
சர்கம் : 74
ஸ்லோகம் : 27





இத்தலத்தில் ஹனுமானின் இடது கரங்களில் கணையாழியை வைத்துக்கொண்டு, வலது கரத்தில் சௌகாந்திகா மலருடன், அபயஹஸ்தம் காட்டியருள்கிறார்!

# வினய ஆஞ்சநேயர்

## திருமழிசை

காண்டம் : யுத்த காண்டம்
சர்கம் : 128
ஸ்லோகம் : 78 to 83

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபனம்






லங்கையில், சீதா தேவியை கண்ட ஹனுமான், பவ்யத்தோடு வணங்கி அவரிடம் கணையாழியை கொடுப்பார். அதன் மூலம், ராமர், சீதா மீது அவர் கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்துவது, அவருடைய வினய குணமாகும். இத்தலத்தில் ஹனுமான் வினயமாக காட்சியளிக்கிறார்!

# வீர ஆஞ்சநேயர்
# கிருஷ்ணகிரி

காண்டம் : சுந்தர காண்டம்
சர்கம் : 41,42
ஸ்லோகம் : 35,36


கிருஷ்ணகிரி
காட்டு
வீர ஆஞ்சநேயர்
திருக்கோயில்






இத்தலத்தில், ஹனுமான் தன் வீரத்திற்கு அறிகுறியாக தனது வலது கரத்தில் சஞ்சீவி மலையை தூக்கிய படியும் இடது கரத்தை தொடையில் வைத்து கொண்டு ஒரு கண் அயோத்தியை பார்த்தவாறு மறுகண் தன்னை நாடிவரும் பக்தர்களை கருணையுடனும் பார்த்தவாறு அருள்பாலிக்கிறார்.

**யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்**
**தத்ர தத்ர க்ருதமஸ்த காஞ்சலிம்**
**பாஷ்பவாரி பரிபூரண லோசனம்**
**மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்**



பலமும் வீரமும் மிக்க மாருதி என்ற பெயரை கொண்ட ஹனுமான் , 'எங்கெல்லாம் ஸ்ரீராம நாமம் ஒலிக்கிறதோ, அங்கெல்லாம் பக்திப் பரவசத்துடன் ,கண்களில் நீர் மல்க, கூப்பிய கரங்களுடன் வினய ஆஞ்சேநேயராக இருக்கிறார்' .

இதுதான் இந்த ஸ்லோகத்தின் பொருள். பக்திபூர்வமாக ராமநாமம் ஜபிக்கும் அனைவரும் ஆஞ்சநேயரின் அருளைப் பெற்று சிறக்க வாழலாம்!!

குறிப்பு:
மேலுள்ள தகவல்கள் அனைத்தும்
கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபனத்தின்
சேவகர்களால் இணையதளத்திலிருந்து
சேகரித்து எழுதப்பட்ட ஒரு முயற்சி.



# ஜெய் சீதாராம்! ஜெய் ஹநுமான்!